**தலைப்பு 269 - மட்டக்களப்பு மாவட்டச் செயலகத்தின் 2016 ஆம் ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

---

தலைப்பு 269 - மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தின் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், இணக்கக்கூற்றுகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகளை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2017 யூலை 13 ஆந் திகதி மாவட்டச் செயலாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகளினதும் இணக்கக் கூற்றுக்களினதும் மீளாய்வின் அடிப்படையிலும் கொடுக்கல் வாங்கல்களின் மாதிரிகளினது போதியளவு செவ்வை பார்த்தலின் அடிப்படையிலும் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் அளவும் எனக்குக் கிடைப்பதற்குள்ள பதவியணியினர், ஏனைய மூலவளங்கள், நேரம் என்பவற்றிற்கமைய இயலுமானளவு விரிவானதோர் கணக்காய்வை உள்ளடக்கக் கூடியவாறிருந்தது.

**1.2 கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் சம்பந்தமாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்**

---

ஒதுக்கீட்டுக் கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்களை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிருவாக பிரமாணங்களுக்கிணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாட்டைத் திட்டமிடுதல், அமுல்படுத்துதல் மற்றும் பராமரித்தல் போன்றன இப்பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

**2. கணக்கு**

---

**2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு**

---

**(அ) மொத்த ஏற்பாடுகள் மற்றும் செலவுகள்**

---

மாவட்டச் செயலகத்திற்கு வழங்கப்பட்டிருந்த மொத்தத் தேறிய நிதி ஏற்பாடு ரூபா 897.00 மில்லியன் ஆக இருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதியளவில் இதில் ரூபா 874.07 மில்லியன் தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் மாவட்டச் செயலகத்திற்கு வழங்கப்பட்டிருந்த மொத்தத் தேறிய நிதி ஏற்பாட்டில் ரூபா 22.93 மில்லியன் அல்லது 3 சதவீதம் சேமிக்கப்பட்டிருந்தது. விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| செலவினம் | 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான | | | தேறிய நிதி ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|
| | தேறிய நிதி ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | |
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | |
| மீண்டுவருபவை | 574.00 | 569.28 | 4.72 | 01 |
| மூலதனம் | 323.00 | 304.79 | 18.21 | 06 |
| மொத்தம் | 897.00 | 874.07 | 22.93 | 03 |

**(ஆ) ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களினால் வழங்கப்பட்ட நிதி ஏற்பாடுகளை பயன்படுத்துதல்**

பல்வேறு செயற்பாடுகளுக்காக ஏனைய 12 அமைச்சுக்கள் மற்றும் 07 திணைக்களங்களினால் ரூபா 54.87 மில்லியன் கூட்டுத்தொகையான நிதியேற்பாடு மாவட்டச் செயலகத்திற்கு வழங்கப்பட்டிருந்தது. அந்த நிதி ஏற்பாடுகளிலிருந்து முறையே ரூபா 28.15 மில்லியன் தொகையும் ரூபா 25.46 மில்லியன் தொகையுமாக ரூபா 53.61 மில்லியன் கூட்டுத்தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் படி மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு முறையே ரூபா 1.00 மில்லியன் தொகையும் ரூபா 0.25 மில்லியன் தொகையுமாக ரூபா 1.25 மில்லியன் தொகையான நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. இச் சேமிப்பு வழங்கப்பட்ட நிதி ஏற்பாட்டில் முறையே 3 சதவீதமாகவும் 1 சதவீதமாகவும் காணப்பட்டது.

## 2.2 முற்பணக் கணக்குகள்

### 2.2.1 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு

**பாராளுமன்றத்தால் அனுமதிக்கப்பட்ட எல்லைகள்**

மாவட்ட செயலகத்திற்குரிய 269011 ஆம் இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பாக பாராளுமன்றத்தினால் அனுமதிக்கப்பட்ட எல்லைகளும் உள்ளபடியான பெறுமதிகளும் கீழே தரப்படுகின்றன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| உச்ச எல்லை | உள்ளபடியானவை | ஆகக் குறைந்த எல்லை | உள்ளபடியானவை | உச்ச எல்லை | உள்ளபடியானவை |
| ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| 35.50 | 35.47 | 20.00 | 30.29 | 120.00 | 101.90 |

## 2.3 கட்டுநிதிக் கணக்குகள்

மாவட்டச் செயலகத்தின் 7002/0000/00/0287/0016/000 ஆம் இலக்க கட்டுநிதிக் கணக்கில் 2016 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ரூபா 607,576 மீதி காணப்பட்டது.

## 2.4 பொது வைப்புக் கணக்கு

மாவட்டச் செயலகம் மற்றும் 14 பிரதேச செயலகங்கள் தொடர்பாக 2016 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான வைப்புக் கணக்குகளின் மீதிகளது கூட்டுத்தொகை ரூபா 136,076,632 ஆக இருந்தது. விபரம் கீழே காட்டப்பட்டுள்ளது.

| கணக்கு இலக்கம் | 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி |
|---|---|
| | ரூபா |
| 6003/0000/00/0015/0000/000 | 563,838 |
| 6000/0000/00/0001/0074/000 | 5,392,779 |
| 6000/0000/00/0002/0098/000 | 103,800 |
| 6000/0000/00/0013/0066/000 | 41,117,327 |
| 6000/0000/00/0014/0010/000 | 893,950 |
| 6000/0000/00/0016/0049/000 | 87,611,477 |
| 6000/0000/00/0017/0017/000 | 247,079 |
| 6000/0000/00/0018/0058/000 | 146,382 |
| **மொத்தம்** | **136,076,632** |

## 2.5 கணக்காய்வு அவதானிப்புகள்

மட்டக்களப்பு மாவட்டச் செயலகத்தின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஒதுக்கீட்டுக் கணக்கு, இணைக்கக் கூற்றுக்கள் என்பன மேலே 1.1 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டுள்ள முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்களுக்கு உட்பட்டு திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தன. அந்த முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புக்களில் பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான அவதானிப்புக்கள் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளன.

# 3. பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான அவதானிப்புக்கள்

## 3.1 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை

மாவட்ட செயலகத்தினால் பின்வரும் பதிவேடுகள் முறையாகவும் நாளதுவரையாகவும் பேணப்படாதிருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

| | பதிவேட்டு வகை | உரிய பிரமாணம் | அவதானிப்புக்கள் |
|---|---|---|---|
| (அ) | நிலையான சொத்துக்கள் பதிவேடு | 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | நாளதுவரையாகப் பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | பிணைப் பதிவேடு | நிதிப்பிரமாணம் 891(1) | நாளதுவரையாகப் பேணப்பட்டிருக்கவில்லை. |

### 3.2 ஒதுக்கீட்டுக் கணக்கு

#### 3.2.1 பாதீட்டு முரண்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மூன்று மீண்டுவரும் செலவின விடயங்களிற்காகவும் 01 மூலதன செலவின விடயத்திற்காகவும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 66,900,000 மொத்த தொகையில் ரூபா 11,768,394 தொகையான அல்லது நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது.

(ஆ) பதினான்கு மீண்டுவரும் செலவின விடயங்களிற்காகவும் 01 மூலதன செலவின விடயத்திற்காகவும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 254,400,000 தொகையான மொத்த தேறிய ஏற்பாட்டில் 12 சதவீதமான ரூபா 30,788,000 தொகை நிதிப்பிரமாணம் 66 இன் கீழ் வேறு செலவின விடயங்களிற்காக மாற்றப்பட்டிருந்தது.

### 3.3 கட்டுநிதிக் கணக்குகள்

நிதிப்பிரமாணம் 373 இன் பிரகாரம், திசெம்பர் 31 இல் உள்ள கட்டுநிதி மீதி அத்திகதியில் திறைசேரிக்கு அனுப்பிவைக்கப்பட வேண்டிய போதிலும் 2016 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான ரூபா 607,576 கட்டுநிதி மீதியினை திறைசேரிக்கு அனுப்பிவைப்பதற்கு 2017 ஆகஸ்ட் 15ஆந் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.4 பொது வைப்புக் கணக்கு

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) திறைசேரியினால் பராமரிக்கப்படுகின்ற பதிவேடுகளின் பிரகாரம், 1983 ஆம் ஆண்டிலிருந்து ரூபா 563,837 தொகையானது வைப்புக் கணக்கில் தொடர்ச்சியாக காணப்பட்டு வருகின்ற போதிலும் மாவட்டச் செயகத்தினால் பராமரிக்கப்படுகின்ற ஏடுகளில் அத்தகைய மீதி காணப்படவில்லை. எனினும், இதனை இனங்கண்டு தீர்ப்பதற்கு இன்றுவரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பொது வைப்புக் கணக்கு தொடர்பாக அரச கணக்குகள் திணைக்களத்தினால் பயன்படுத்தப்படுகின்ற கணக்கு இலக்கத்தை பொருட்படுத்தாமல் மாவட்டச் செயலகம் பொது வைப்புக்கணக்கில் தவறான கணக்கு இலக்கங்களை பயன்படுத்தியிருந்தது.

## 3.5 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

### 3.5.1 வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம்

2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 1/2014 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கையின் 04 ஆம் பந்தியின் பிரகாரம், வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தில் நாளதுவரையாக்கப்பட்ட நிறுவனக் கட்டமைப்பு, அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளபடியான பதவியணியினர், கட்டுநிதி தேவைப்பாடுகள், இலக்குகளை அடைவதற்கான நடவடிக்கைகள், தூரநோக்கு மற்றும் உள்ளகக் கணக்காய்வுத் திட்டம் போன்ற விடயங்கள் உள்ளடக்கப்பட்டிருத்தல் வேண்டும். எனினும், 2016 ஆம் ஆண்டிற்காக மாவட்டச் செயலகத்தினால் தயாரிக்கப்பட்ட செயல் நடவடிக்கைத் திட்டத்தில் மேலே குறிப்பிடப்பட்ட தகவல்கள் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.5.2 சொத்துக்கள் முகாமைத்துவம்

மாவட்டச் செயலகத்தின் சொத்துக்கள் முகாமைத்துவம் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

**(அ) பயன்படுத்தப்படாத சொத்துக்கள்**

மாவட்டச் செயலகத்தில் வள நிலையம் ஒன்றை அமைக்கும் நோக்கில் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சினால் 2014 செப்தெம்பர் 12 ஆந் திகதி ரூபா 490,000 பெறுமதியான 05 கணனிகள் வழங்கப்பட்டிருந்தும் இன்று வரை அவ்வள நிலைய செயற்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமையினால் அக்கணனிகள் பெற்றுக்கொள்ளப்பட்ட திகதியிலிருந்து விளைவற்றுக் காணப்படுவதுடன் அவற்றின் உத்தரவாத காலமும் ஏற்கெனவே காலவதியாகியுள்ளன.

**(ஆ) வெளித் தரப்பினர்களுக்கு வழங்கப்பட்ட சொத்துக்கள்**

மட்டக்களப்பு கிறீன் வீதியில் அமைந்துள்ள மாவட்டச் செயலகத்திற்கு சொந்தமான இரண்டு உத்தியோகபூர்வ விடுதிகளில் 2008 ஆம் ஆண்டிலிருந்து வெளிநபர்கள் வசித்து வருகின்ற போதிலும், அவ்விடுதிகளை மீளப்பெற்று வதிவிட வசதிகள் வழங்குமாறு விண்ணப்பங்கள் சமர்ப்பித்துள்ள மாவட்டச் செயலகத்தின் உத்தியோகத்தர்களுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(இ) தீர்க்கப்படாத பொறுப்புக்கள்**

மாவட்ட செயலகத்திற்குச் சொந்தமான கட்டடத்திற்காக மட்டக்களப்பு மாநகர சபைக்கு 2006 ஆம் ஆண்டிலிருந்து 2013 ஆம் ஆண்டு வரை செலுத்த வேண்டிய ரூபா 190,668 தொகையான ஆதன வரி 2017 ஆகஸ்ட் 15 வரையிலும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

**3.6 இணக்கமின்மை**

**சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மை**

கணக்காய்வுச் செவ்வையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றிலுள்ள ஏற்பாடுகளுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் பகுப்பாய்வு செய்து கீழே தரப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் முதலியவற்றுக்கான தொடர்பு | பெறுமதி<br>ரூபா | இணக்கமின்மை |
|---|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்தின் நிதிப் பிரமாணங்கள் | | |
| (i) நிதிப்பிரமாணம் 103 மற்றும் 104 | 898,092 | போரதீவுப்பற்று மற்றும் ஏறாவூர் பற்று பிரதேச செயலகங்களிற்குச் சொந்தமான 03 வாகனங்கள் முறையே 2011, 2012 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளில் விபத்திற்குள்ளாகி ரூபா 898,092 மொத்த தொகையான நட்டம் ஏற்பட்டிருந்தது. இந்த நட்டத்திற்குப் பொறுப்பான நபர்களையும் நட்டத்தின் அளவையும் நிர்ணயிப்பதற்கு விசாரணை சபைகள் நியமிக்கப்பட்ட போதிலும், அதன் அறிக்கைகள் இது வரை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) நிதிப்பிரமாணம் 215 (3) | | குறித்ததோர் ஆண்டில் குறித்துரைத்த நோக்கத்திற்காக வழங்கப்பட்ட நிதி ஏற்பாட்டிலிருந்து பற்றுதல் செய்து எதிர்காலத்தில் மேற்கொள்ளவிருக்கும் கொடுப்பனவிற்காக அதனை வைப்புக் கணக்கில் வைத்திருக்க முடியாதுள்ள போதிலும், இதற்கு முரணாக போதைப்பொருள் பாவனையைக் கட்டுப்படுத்தும் விழிப்புணர்வூட்டல் நிகழ்ச்சித்திட்டத்திற்கு மீளாய்வாண்டிற்காக ஏற்பாடு செய்யப்பட்ட நிதியிலிருந்து ரூபா 350,958 தொகையினை குறித்த நிகழ்ச்சித்திட்டத்தின் செயலமர்வினை எதிர்வரும் நிதியாண்டில் நடாத்துவதற்காக மாவட்டச் செயலகத்தினால் பிறிதொரு வங்கிக்கணக்கில் வைப்புச் செய்யப்பட்டிருந்தது. |
| (ஆ) 2009 திசெம்பர் 22 ஆந் திகதிய எச்ஏஜீஎன்/4/2/1 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கை | | மாவட்டச் செயலகம் மற்றும் 14 பிரதேச செயலகங்களில் கடமையாற்றும் 35 கிராம உத்தியோகத்தர்கள், 36 சாரதிகள் மற்றும் 81 ஏனைய அரசாங்க உத்தியோகத்தர் களிடமிருந்து பாதுகாப்புப் பிணைகள் பெறப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (இ) 2015 ஆம் ஆண்டு யூலை 07 ஆந் திகதிய BD/GPS/130/9/14/MC-II ஆம் இலக்க தேசிய வரவு செலவுத்திட்ட திணைக்கள பணிப்பாளரின் கடிதம். | 1,202,920 | மாவட்டச் செயலகத்தில் பணிபுரிந்து இடமாற்றம் பெற்றுச் சென்ற மற்றும் தமது பதவியை வறிதாக்கிய 09 வெளிக்கள உத்தியோகத்தர் களுக்கு வழங்கப்பட்ட ரூபா 1,202,920 பெறுமதியான 09 மோட்டார் சைக்கிள்களுக்கான பெறுமதி உரிய உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட்டிருக்கவில்லை. |

## 3.7 செயற்திட்ட அமுலாக்கலின் நலிவுகள்

-----------------------------------------------

மாவட்டச் செயலகத்தினால் அமுல்படுத்தப்பட்ட செயற்திட்டங்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வு தெரிவுப் பரிசோதனைகளின் போது பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

### 3.7.1 வீதிகள் மற்றும் மதகுகளை மேம்படுத்துதல்

--------------------------------------------------------

தேசியக் கொள்கைகள் மற்றும் பொருளாதார விவகாரங்கள் அமைச்சின் கிராமிய உட்கட்டமைப்பு அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் கீழ் மண்முனை மேற்கு பிரதேச செயலக எல்லைக்குட்பட்ட 09 வீதிகள் மற்றும் 03 மதகுகளை மேம்படுத்துவதற்காக மீளாய்வாண்டின் இறுதி வரையில் ரூபா 13,039,503 தொகை செலவிடப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 2015 திசெம்பர் 30 ஆந் திகதிய 2016/01 ஆம் இலக்க நிதி ஆணைக்குழு சுற்றறிக்கையின் பிரகாரம் மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி வீதிகளை நிர்மாணிக்கும் போது அவற்றின் நிலைத்திருக்கும் தன்மையை பேணும் வகையில் காபட் இடுதல், தார் இடுதல் மற்றும் கொங்றீட் இடல் என்பன செய்யப்பட வேண்டியதுடன் கிறவல் இடல் போன்ற தற்காலிக செயற்பாடுகள் மேற்கொள்ளலாகாது எனக் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், இதற்கு முரணாக மேற்கூறிய வீதிகளில் 02 வீதிகளுக்கு கிறவலிடப்பட்டிருந்தன.

(ஆ) 04 வீதிகள் மற்றும் 03 மதகுகளுக்கு 1,302 கனமீற்றர் அளவான கிறவல் இடப்பட்டிருந்தமை தொழில்நுட்ப உத்தியோகத்தரால் எழுத்து மூலம் உறுதிப்படுத்தப்பட்டிருந்தும் பிரதேச செயலகத்தினால் 1,470 கனமீற்றர் அளவான கிறவலிற்கு கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது. இதனால் ரூபா 123,669 தொகை ஒப்பந்தக்காரர்களுக்கு மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது.

(இ) நரிபுல் தோட்டம் காசுபதி வீதிக்கு கொங்றீட் இடும் போது 27 கியூபிக் மீற்றர் அளவிற்கு மண் இடப்பட்டிருந்தும் பிரதேச செயலகத்தினால் 32.6 கியூபிக் மீற்றர் அளவிற்கு கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது. இதனால் ரூபா 12,465 தொகை ஒப்பந்தக்காரர்களுக்கு மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது.

(ஈ) ஆயித்தமலை வடக்கு கட்பூதானை வீதி மற்றும் கரவெட்டி பனங்கண்டடிச்சேனை வீதிகளுக்கு முறையே 450 மில்லிமீற்றர் மற்றும் 600 மில்லிமீற்றர் உயரத்திற்கு கிறவல் இடப்பட வேண்டுமென மதிப்பீட்டில் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் 300 மில்லிமீற்றர் உயரத்திற்கு மாத்திரமே கிறவல் இடப்பட்டிருந்தது. இதன் விளைவாக மழைகாலங்களில் வீதிக்கு இடப்பட்ட கிறவல் நீரில் அடித்துச் செல்லக்கூடிய வாய்ப்புகள் காணப்படுகின்றது.

**3.7.2 திவிநெகும நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பசுக்களை வழங்குதல்**

--------------------------------------------------------------------------------

பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் திவிநெகும தேசிய நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் சமூர்த்தி பயனாளிகளிற்கு பசுக்களை வழங்கும் செயற்திட்டத்திற்காக 2014 ஆம் ஆண்டில் மண்முனை தென் எருவில்பற்று பிரதேச செயலகத்திற்கு ரூபா 4,500,000 நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுப் பரிசோதனையின் போது பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) மாவட்ட கால்நடை மருத்துவரின் டிவீஎஸ்/பீசீஓ/திவிநெகும/2014 ஆம் இலக்க 2014 செப்தெம்பர் 02 ஆந் திகதிய கடிதத்தின் பிரகாரம் பசுக்களை பெற்றுக்கொள்ளக்கூடிய வழங்குனர்களின் பெயர்கள் சிபாரிசு செய்யப்பட்டிருந்தும் சிபாரிசு செய்யப்படாத வழங்குனரிடமிருந்து மாவட்டச் செயலகத்தினால் 75 பசுக்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன.

(ஆ) 02/2012 ஆம் இலக்க 2012 யூலை 10 ஆந் திகதிய வாழ்வாதார எழுச்சி (திவிநெகும) சுற்று நிருபத்தின் பிரகாரம் மாடு வளர்ப்பு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் இணைத்துக்கொள்ளும் பயனாளிகளுக்கு 02 பசுக்களை வழங்குவதற்காக ஆகக்கூடிய உதவித் தொகையாக ரூபா 60,000 வழங்கப்படுதல் வேண்டும். மேலும், மாவட்டச் செயலகத்திற்கு கிடைக்கப்பெற்ற விலை மனுக்களின் அடிப்படையில் ஒரு கிலோ ரூபா 180 விலையில் 02 பசுக்களை குறித்த உதவித் தொகைக்கு வழங்கக்கூடியதாக இருந்தபோதிலும் மாவட்டச் செயலகமானது ஒரு பயனாளிக்கு ஒரு பசுவை மாத்திரமே வழங்கியிருந்ததனால் 150 பசுக்களை வழங்குவதற்குப் பதிலாக 75 பசுக்கள் மாத்திரமே வழங்கப்பட்டிருந்தன.

(இ) கால்நடை மருத்துவரின் சுகாதார சான்றிதழ் இன்றி பசுக்கள் பயனாளிகளிற்கு வழங்கப்பட்டமையினால் பயனாளிகளிற்கு வழங்கப்பட்ட பசுக்களில் ஏழு பசுக்கள் குறிப்பிட்ட காலத்தினுள் இறந்திருப்பது பயனாளிகளிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட எழுத்து மூல வாக்குமூலத்தினால் உறுதிப்படுத்தப்பட்டது.

**3.7.3 கிராமிய பொருளாதார அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்**

-----------------------------------------------------------------

கிராமிய பொருளாதார அலுவல்கள் அமைச்சினால் கிராமிய பொருளாதார அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் மட்டக்களப்பு மாவட்டத்தில் கிராமிய வாழ்வாதார அபிவிருத்தி மற்றும் கிராமிய உட்கட்டமைப்பு வசதிகளை விருத்தி செய்வதற்காக மாவட்டச் செயலகத்திற்கு வழங்கிய நிதி ஏற்பாடுகளிலிருந்து ரூபா 1,470,000 தொகை 2016 ஆம் ஆண்டின் போது போதைப்பொருள் பாவனையை கட்டுப்படுத்தும் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டத்திற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) கிராமிய பொருளாதார அலுவல்கள் அமைச்சு செயலாளரின் 2016 ஆகஸ்ட் 01 ஆந் திகதிய எம்ஆர்ஈஏ/5/9/1 இலக்க கடிதத்தின் பிரகாரம், கிராமிய வாழ்வாதார அபிவிருத்தி மற்றும் கிராமிய உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி போன்ற செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்காக இந்நிதி பயன்படுத்தப்பட வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், இதற்கு முரணாக மாவட்டச் செயலகத்தினால் போதைப்பொருள் பாவனையைக் கட்டுப்படுத்துதல் தொடர்பான விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு இந்நிதி செலவு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) மாணவர்கள் மற்றும் இளைஞர்களுக்கிடையில் போதைப்பொருள் பாவனையைக் கட்டுப்படுத்தல் தொடர்பான விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டத்திற்காக மேற்கொள்ளப்பட்ட நிதியேற்பாட்டின் மூலம் 1,500 மேலங்கிகளை கொள்வனவு செய்வதற்கு மாவட்ட

பெறுகைக் குழு தீர்மானித்திருந்த போதிலும் அத்தீர்மானத்திற்கு முரணாக 1,800 மேலங்கிகள் ரூபா 1,119,042 செலவில் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன.

(இ) குறித்த நிகழ்ச்சித்திட்டத்திற்காக 2016 திசெம்பர் மாதத்தில் கொள்வனவு செய்யப்பட்ட 1,800 மேலங்கிகளை மாணவர்கள் மற்றும் இளைஞர்களுக்கு பகிர்ந்தளிக்காது இன்று வரை களஞ்சியத்தில் வைக்கப்பட்டிருந்ததனால் இம் மேலங்கிகளுக்காக செலவிடப்பட்ட தொகை விளைவற்ற செலவாக மாறியுள்ளது.

## 3.8 போதிய அதிகாரத்தினால் ஆதாரப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

---

கோறளைப்பற்று மத்தி பிரதேச செயலகத்தில் உதவிப் பிரதேச செயலாளராக கடமையாற்றும் உத்தியோகத்தர் உரிய அங்கீகாரத்தினைப் பெற்றுக் கொள்ளாது வெளிநாட்டுப் பயணம் மேற்கொண்டமைக்காக ரூபா 607,576 தொகை இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவனத்திற்கு 2016 இல் பிரதேச செயலகத்தினால் செலுத்தப்பட்டிருந்தது. இது அங்கீகரிக்கப்படாத வெளிநாட்டுப் பயணமாக இருந்ததோடு இவ் வெளிநாட்டுப் பயணத்திற்காக நிதி ஒதுக்கீடுகள் இல்லாதிருந்த போதிலும் பிறிதொரு தேவைக்காக வழங்கப்பட்டிருந்த கட்டுநிதியினைப் பயன்படுத்தி இப் பயணத்திற்கான கொடுப்பனவை மேற்கொள்வதற்கு சிபாரிசு வழங்கிய உத்தியோகத்தருக்கெதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.9 தெளிவான மோசடித் தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

---

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் மோசடித் தன்மையான கொடுக்கல் வாங்கல்கள் கண்டறியப்பட்டன.

(அ) கிராமிய பொருளாதார அலுவல்கள் அமைச்சு, கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சின் நிதியேற்பாட்டின் கீழ் ஓட்டமாவடி பிரதேசத்திலுள்ள இரு சிறிய ஆடைக் கைத்தொழிற்சாலைகள் மற்றும் தையல் பயிற்சி நிலையங்களின் 35 தையல் இயந்திரங்கள், அதற்கான உபகரணங்கள் மற்றும் தையல் பயிற்சி ஆசிரியர்களின் சம்பளங்களுக்காக கோறளைப்பற்று மேற்கு பிரதேச செயலகத்திற்கு 2016 ஆம் ஆண்டின் போது ரூபா 4,829,896 நிதியேற்பாடு வழங்கப்பட்டிருந்தது. இவை தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(i) தையல் பயிற்சி நிலையத்திற்கு 2017 சனவரி மாதம் இறுதி வரை பயிற்றுவிப்பாளர்கள் நியமிக்கப்படாதிருந்த போதிலும் பயிற்றுவிப்பாளர்கள் நியமிக்கப்பட்டு தையல் பயிற்சிகள் வழங்கப்பட்டதாக மோசடியாக பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தரால் சிபாரிசு செய்யப்பட்டு 2016 திசெம்பர் 30 ஆந் திகதி ரூபா 618,750 செலுத்தப்பட்டிருந்தது.

(ii) தையல் பயிற்சி நிலையத்திற்காக கணக்காய்வுப் பரீட்சிப்புத் திகதியான 2017 சனவரி 30 வரை எதுவித பொருட்களும் பெற்றுக் கொள்ளப்படாத போதிலும் ரூபா 2,490,524 பெறுமதியான 21 பொருட்கள் பெற்றுக்கொள்ளப்பட்டதாக பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தரால் சான்றுறுதிப்படுத்தப்பட்டு 2016 திசெம்பர் 30 ஆந் திகதி 06 காசோலைகள் மூலம் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

(ஆ) வாழ்வாதார எழுச்சி (திவிநெகும) திணைக்களத்தின் நிதி ஏற்பாட்டின் கீழ் வறிய மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில் கோறளைப்பற்று பிரதேச செயலகத்தினால் 05 பயனாளிகளுக்கு அவர்களின் சேமிப்புக் கணக்கில் வைப்புச் செய்யப்பட்ட ரூபா 114,000

பணம் வாழ்வாதார எழுச்சி சமுதாய அடிப்படை வங்கியில் கடமையாற்றும் ஊழியர்களால் மோசடியாகப் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தமை அவ்வங்கியின் முகாமையாளர் மற்றும் உத்தியோகத்தர்களினால் அளிக்கப்பட்ட எழுத்துமூல வாக்குமூலத்திலிருந்து உறுதிப்படுத்தப்பட்டுள்ள போதிலும், குறித்த ஊழியர்களுக்கெதிராக இதுவரை ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) கிராமிய பொருளாதார அபிவிருத்தி அமைச்சு மற்றும் கைத்தொழில் வாணிப அமைச்சு ஆகியவற்றின் நிதியேற்பாட்டின் கீழ் களுவாஞ்சிக்குடி பிரதேசத்தில் இரு தையல் பயிற்சி நிலையங்களை நிறுவுவதற்காக 26 தையல் இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் ரூபா 575,978 பெறுமதிக்கு கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. இருப்பினும், அவ்வாறான இரண்டு பயிற்சி நிலையங்களை தாபித்து அவற்றிற்கு இப்பொருட்களை வழங்குவதற்குப் பதிலாக பிரதேச செயலகத்தினால் தெரிவு செய்யப்பட்ட இரண்டு கிராம அபிவிருத்திச் சங்கங்களுக்கு 2016 திசெம்பர் 23 ஆந் திகதி அப் பொருட்கள் கையளிக்கப்பட்டிருந்தன. அத்துடன், மேற்குறித்த தையல் பயிற்சி நிலையங்களை ஆரம்பித்து தேவையான ஆளணியினர் 2017 மார்ச் 03 ஆந் திகதி வரை நியமிக்கப்படாதிருந்த போதிலும், அந்நியமனங்கள் வழங்கப்பட்டதாகக் குறிப்பிட்டு அப் பயிற்சி நிலையங்களின் பயிற்றுவிப்பாளர்கள் மற்றும் காவலாளிகளின் சம்பளங்களிற்காகவும் நிர்வாக செலவினங்களிற்காகவும் ரூபா 412,000 தொகை 2016 இல் செலுத்தப்பட்டிருந்தது.

(ஈ) பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் வறிய மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில் மண்முனை தென் எருவில் பற்று பிரதேச செயலகப் பிரிவிலுள்ள எருவில் கிராமத்திலுள்ள வாழ்வாதார எழுச்சி வங்கியினால் 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் சமூர்த்தி பயனாளிகளிற்கு கடன் வழங்கப்பட்டு அபிவிருத்தி உத்தியோகத்தர்களினால் கடன்கள் தவணைப் பணங்கள் அறவிடப்பட்டிருந்தன. அவ்வாறு 16 பயனாளிகளிடமிருந்து அறவிடப்பட்ட ரூபா 37,650 தொகையினை குறித்த வங்கியில் வைப்புச் செய்யாமல் மோசடி செய்திருந்தமை பயனாளிகள் மற்றும் வங்கி முகாமையாளரினால் எழுத்துமூலம் அளிக்கப்பட்ட வாக்குமூலத்திலிருந்து உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. எனினும் இது தொடர்பாக உரிய நபர்களுக்கு எதிராக ஒழுங்காற்று நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வளிப்பு, மீள்குடியேற்றம் மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சினால் மண்முனைப்பற்று பிரதேச செயகலக பிரிவிற்குள் மீள்குடியமர்த்தப்பட்ட 47 பயனாளிகளிற்கு வீடுகளை நிர்மாணிப்பதற்காக 2016 ஆம் ஆண்டு ரூபா 36,848,000 நிதியேற்பாடு வழங்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுப் பரிசோதனையின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) வீட்டு நிர்மாண வேலைகள் முழுமையாக பூர்த்தி செய்யப்பட்ட பின்னரே இறுதிக் கொடுப்பனவினை செலுத்த வேண்டுமென சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வளிப்பு, மீள்குடியேற்ற மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சின் செயலாளரினால் அனுப்பப்பட்ட 2016 ஏப்ரல் 24 ஆந் திகதிய MR/4/1 இலக்க கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது. இருப்பினும், தங்களின் வீடுகளின் கூரை, கதவு மற்றும் யன்னல்களைப் பூர்த்தி செய்திருக்காத 47 பயனாளிகளிற்கு இந்த நிர்மாண வேலைகள் முழுமையாக பூர்த்தி செய்யப்பட்டதாக பொறுப்புவாய்ந்த உத்தியோகத்தரினால் சிபாரிசு செய்யப்பட்டு 2016 திசெம்பர் 21 ஆந் திகதி ரூபா 9,118,000 தொகை அப்பயனாளிகளின் வங்கிக் கணக்குகளுக்கு விடுவிக்கப்பட்டிருந்தது.

(ii) இறுதிக் கட்டக் கொடுப்பனவின் போது மாவட்டச் செயலாளரின் முறையான அங்கீகாரம் பெறப்படுதல் வேண்டுமென அமைச்சின் செயலாளரினால் அனுப்பப்பட்ட மேற்குறித்த கடித்தில் குறிப்பிடப்பட்டிருந்தும் மாவட்டச் செயலாளரின் அங்கீகாரமின்றி பிரதேச செயலகத்தினால் அனைத்து பயனாளிகளுக்கும் இறுதிக்கட்டக் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

## 3.10 முகாமைத்துவ நலிவுகள்

-------------------------------

கணக்காய்வுத் தெரிவுப் பரிசோதனையின் போது பின்வரும் நலிவுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) சிம் ஸ்ரீ லங்கா என்றழைக்கப்படும் தன்னார்வ தொண்டு நிறுவனம் கோறளைப்பற்று மேற்கு பிரதேச செயலகத்தின் அதிகாரப்பரப்பிற்கு அப்பால் உள்ள ஒரு கிராமத்தில் அமைந்துள்ளதுடன் அத்தொண்டு நிறுவனம் எந்தவொரு சமூக நடவடிக்கைகளிலும் ஈடுபடுவதில்லை என சமூக சேவை உத்தியோகத்தர் மற்றும் கிராம சேவை உத்தியோகத்தர்களால் எழுத்து மூலம் அளிக்கப்பட்ட வாக்குமூலத்திலிருந்து உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. எனினும், கோரளைப்பற்று மேற்கு பிரதேச செயலகமானது இத்தொண்டு நிறுவனத்திற்கு 2014 ஆம் ஆண்டு ரூபா 300,000 பெறுமதியான இரு மின் பிறப்பாக்கிகள், மடிகணனி, டிஜிடல் கமெரா என்பவைகளை வழங்கியிருந்தது. இருப்பினும், மேற்படி பொருட்கள் அங்கு காணப்பட்டிருக்கவில்லை என்பது மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுப் பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்டது. மேலும், இப்பிரதேச செயலகமானது 2016 ஆம் ஆண்டிலும் இத்தொண்டு நிறுவனத்திற்கு ரூபா 300,000 பெறுமதியான மேசைக்கணனி, மடிகணனி, அச்சுப்பொறி என்பனவற்றை பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்ட நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் வழங்கியிருந்தது. இவ்வாறு தொடர்ச்சியாக அத்தொண்டு நிறுவனத்திற்கு பொருட்களை வழங்குவதற்கு சிபாரிசு செய்த பொறுப்புவாய்ந்த உத்தியோகத்தருக்கு எதிராக எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) அரசாங்க நிர்வாகம் உள்நாட்டலுவல்கள் அமைச்சுச் செயலாளரின் 2006 மார்ச் 26 ஆந் திகதிய எச்ஏ/டிஏ/12/27 ஆம் இலக்க கடிதத்தின் பிரகாரம், சகல பிரதேச செயலாளர்களும் அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட உத்தியோக பூர்வ விடுதியில் கட்டாயம் வசிக்க வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், மண்முனைப்பற்று பிரதேச செயலாளரிற்கு ஒதுக்கப்பட்ட உத்தியோகபூர்வ விடுதியில் பிரதேச செயலாளர் வசிக்காமல் அதில் பிரதேச செயலகத்தின் சமுர்த்தி தலைமை அலுவலகம் 2015 நவம்பர் மாதத்திலிருந்து செயற்பட்டுவருகின்றது. இருப்பினும், இவ் உத்தியோகபூர்வ விடுதியினை உரிய நோக்கத்திற்கு பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

## 3.11 மனிதவள முகாமைத்துவம்

### அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்

2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறாகும்.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 49 | 48 | 01 |
| (ii) | மூன்றாம் நிலை | 44 | 11 | 33 |
| (iii) | இரண்டாம் நிலை | 927 | 802 | 125 |
| (iv) | ஆரம்ப நிலை | 146 | 128 | 18 |
| (v) | ஏனையோர் (தற்காலிகம்) | - | 08 | - |
| | மொத்தம் | 1,166 | 997 | 177 |

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நூறு கிராம உத்தியோகத்தர் பதவிகள் வெற்றிடமாக காணப்பட்ட போதிலும் அது தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்காமையினால் குறித்த கிராம மக்கள் அதிக சிக்கல்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர்.

(ஆ) வெற்றிடமாகக் காணப்படும் ஆறு நிர்வாக உத்தியோகத்தர் பதவிகளுக்கு நிரந்தர உத்தியோகத்தர்கள் ஆட்சேர்க்கப்படாமையினால் பிரதேச செயலகங்களில் நிர்வாக நடவடிக்கைகள் பலவீனமான நிலையில் காணப்படுகின்றன.

(இ) அரசாங்க நிருவாக முகாமைத்துவ அமைச்சின் 2016 யூன் 29 ஆந் திகதிய 05/2016ஆம் இலக்க ஒருங்கிணைந்த சேவைகள் சுற்றறிக்கையின் பிரகாரம், 2016 திசெம்பர் 31 ஆந் திகதியன்று ஒரே சேவை நிலையத்தில் 05 வருடங்களுக்கு அதிகமாக சேவையாற்றும் சகல அலுவலர்களையும் இடமாற்றம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டிய போதிலும் மாவட்டச் செயலகம் மற்றும் 14 பிரதேச செயலகங்களில் 05 வருடங்களுக்கு அதிகமாக கடமையாற்றும் 58 முகாமைத்துவ உதவியாளர்களுக்கு இடமாற்றம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.